செ.வெ.எண். 50/ஆகஸ்ட் செய்தி வெளியீடு நாள்: 22.08.2016

# மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் 27 நபர்களுக்கு புதிய குடும்ப அட்டைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. கே. விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.





தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் இன்று (22.08.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

பொதுமக்கள் கோரிக்கை மனுக்களாக பசுமை வீடு, பட்டா மற்றும் சிட்டா பெயர் மாற்றம், மேல்நிலைத் தொட்டி அமைத்தல், புதிய ஆழ்துளை கிணறு, தகனமேடை, குடிநீர் வசதி, மின் வசதி, பட்டா வேண்டுதல், கல்வி உதவி தொகை, தரைமட்ட பாலம், மூன்று சக்கர வண்டி, ஓய்வூதிய தொகை, வாரிசு சான்றிதழ், ஜாதி சான்றிதழ், பேருந்து வசதி, குழந்தைகள் நல மையம், வேலைவாய்ப்பு, கல்வி உதவித்தொகை, இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டி மற்றும் வீட்டுமனை பட்டா உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய மனுக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் மனுக்கள் என மொத்தம் 392 மனுக்களை பெற்று சம்மந்தப்பட்ட துறை அலுவலரிடம் வழங்கி உடனடி தீர்வு காண வேண்டுமென அறிவுறுத்தினார்.

முன்னதாக 27 நபர்களுக்கு புதிய குடும்ப அட்டையும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 1 நபருக்கு கண்கண்ணாடியும் மற்றும் ஊன்றுகோள் போன்ற நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் திரு.கே.விவேகானந்தன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ. சங்கர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு. ஸ்ரீதர், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு. மு. பிச்சைராமன், உதவி இயக்குநர் (பஞ்சாயத்து) திருமதி. ஆர்த்தி, தனி துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் திருமதி. மல்லிகா, மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) திருமதி. பாப்பாத்தி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திருமதி. இலாஹிஜான், பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு. அமீர்பாஷா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. முத்தரசு, மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு. மகிழ்நன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
தருமபுரி.